29.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயத்தில் தண்ணீர் பயன்பாட்டை குறைக்கும் நீர்க் குழாய்: வேளாண்மை துறை ஆலோசனை

விவசாயத்தில் தண்ணீரை சிக்கனப்படுத்தும் நீர்க் குழாய்களை விவசாயிகள் அமைக்க வேண்டுமென கடலூர் மாவட்ட வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) பெ.ஹரிதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நெல் சாகுபடியில் பாசன நீர் தேவை முக்கிய தனித்துவம் வாய்ந்த இடுபொருளாக உள்ளது.

பாசனத் திட்டங்களுக்கு நிதி ஆதாரம் குறைவு, நீர்ப் பங்கீட்டில் சிக்கல், நிலத்தடி நீரை வரைமுறையின்றி உறிஞ்சுதல் ஆகியவற்றினால் நெல் உற்பத்தி பாதிக்கும் சூழல் உள்ளது.

இருப்பினும் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப நெல் உற்பத்தியை அதிகரித்தே ஆகவேண்டிய கட்டாயம் நிலவுகிறது.

குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு நெல் உற்பத்தியை அதிகரிக்கும் சவாலை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள மணிலாவில் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டு பரவலாகக் கடைபிடிக்க தொடங்கியுள்ள பானிபைப் (வயல் நீர் குழாய் முறை) மூலம் தேவையறிந்து நீர் மேலாண்மை செய்யும் முறை மிகவும் இன்றியமையாததாகும்.

மிக சொற்பமான தொகை செலவு செய்து விலை மதிப்பற்ற தண்ணீரை சிக்கனமாக தேவைக்கேற்ப பயன்படுத்த உதவிடும் எளிய முறையாக உள்ளது.

நெல்வயலில் நீர்குழாய் மூலம் பாசன மேலாண்மை செய்வதனால் காய்ச்சலும்,

பாய்ச்சலுமாக நீர் மேலாண்மை செய்யப்படுகிறது. ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்ய வழக்கமான முறையில் 2,000 லிட்டர் நீர் தேவைப்படும். நீர்குழாய் முறையில் 1,400 லிட்டர் மட்டுமே தேவைப்படுகிறது. மின்சாரம், டீசல் தேவை குறையும். நிலக்கடி நீர் விரையமாவது தடுக்கப்படுகிறது. வளிமண்டலம் வெப்பமாகக் காரணமான மீத்தேன் வாயு வெளியாவது பெருமளவு குறைகிறது. உற்பத்தி திறன் 15 சதம் வரை கூடுகிறது.

இதனை அமைப்பதற்கு எக்டருக்கு 4 எண்கள், 1 அடி நீள, 4 அங்குல அகலமுள்ள கீழ்வாட்டில் துளையிடப்பட்ட பி.வி.சி குழாய்கள் தேவைப்படும். ஒரு குழாயின் மதிப்பு ரூ.200 மட்டுமே.

எனவே நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தவறாது பானிபைப் எனும் நெல் வயல் நீர் குழாய் முறை மூலம் பாசன நீர் மேலாண்மை செய்து நீர் சிக்கனத்தை கடைபிடிப்பதுடன் மீத்தேன் வாயு வெளியாகி புவி வெப்பமயமாதலை தடுத்து சுற்றுச்சூழல் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என அதில் தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## நீர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த மகாராஜகடை கிராமத்தில், விவசாயிகளுக்கு பாசன நீர் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியை வேளாண்மை உதவி இயக்குனர் ரமேஷ் தலைமை வகித்து, துவக்கி வைத்தார். நீர் சேமிப்பு, நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு அவர் விளக்கம் அளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நந்தினி முன்னிலை வகித்தார். எலுமிச்சங்கிரியில் செயல்படும் டாக்டர் பெருமாள் வேளாண்மை மைய வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார், பாசன நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தார். வேளாண்மை அலுவலர்கள் சரவணன், அகிலாண்டீஸ்வரி ஆகியோர்,

மழைநீர் சேமிப்பு, கோடை உழவின் முக்கியத்துவம், பண்ணை குட்டை அமைத்தலின் பயன்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

**சில்வர் ஓக் நாற்றுகள் அவசர அவசியம்**

கோத்தகிரி : 'கோத்தகிரி பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் சில்வர் ஓக் நாற்றுகள் வழங்கவேண்டும்' என, கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கோத்தகிரி பகுதியில், அதிக நிலப்பரப்பில், தேயி லை பயிரிடப்பட்டுள்ளது. தேயிலை தோட்டங்களில், நிழலுக்காகவும், ஊடுபயிராகவும் சில்வர் ஓக் மரங்களை விவசாயிகள் நடவு செய்துள்ளனர். இதில், பெரும்பாலான தேயிலை தோட்டங்களில், சில்வர் மரங்கள் குறைந்து, வெயிலில் வாடி வருகின்றன. விவசாயிகள் கூறுகையில்,'இனிவரும் காலங்களில் பருவமழை பெய்ய வாய்ப்புள்ளதால், தேயிலை தோட்டங்களில் நடுவதற்காக சில்வர் ஓக் நாற்றுகளை விரைவில் வழங்கவேண்டும்' என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பருப்பு கொள்முதலுக்கு 200 மையங்கள்



புதுடெல்லி: பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த, பருப்பு வகைகளை இறக்குமதி மற்றும் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து அதிக அளவில் இருப்பு வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. கடந்த ஆண்டு காரிப் பருவத்தில் பருப்பு உற்பத்தி 5.54 மில்லியன் டன்களாக இருந்தது. இது இந்த ஆண்டில் 57 சதவீதம் அதிகரித்து 8.7 மில்லியன் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு 2 மில்லியன் டன் பருப்பு இருப்பு வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கர்நாடகா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் இருந்து பருப்பு வகைகள் வரத்துவங்கும் என்பதால், விவசாயிகளிடம் இருந்து இவற்றை கொள்முதல் செய்ய 200 மையங்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

**ஜம்மு-காஷ்மீரில் வாழ்வதற்காக விவசாய கருவிகளை விற்பனை செய்யும் மக்கள்**




ரஜோரி: ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ரஜோரி மாவட்டத்தில் தண்டி காசி பகுதியில் அன்றாட பிழைப்புக்காக விவசாய கருவிகள் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.தொடர்ந்து 83 வது நாட்களாக தடை உத்தரவு அமலில் உள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பல தொழில்கள் முடங்கியுள்ளன. குதிரை வண்டிகளை வைத்து பிழைப்பு நடத்தும் பலரின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகியுள்ளது. விவசாயிகள் வேலை கிடைக்காமல் தவித்துவருகின்றனர். இதனால சிறிய கருவிகளை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.